# 72

# வெற்றியாளர் . . . மற்றும் இன்னும் திறமைசாலி

## படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #30

VII. இயேசுவின் ஊழியத்தில் கடைசி வாரம் (தொடர்ச்சி).
E. செவ்வாய்க்கிழமை: “கேள்விகளின் பெரியநாள்” (தொடர்ச்சி).
3. கேள்விகளின் வரிசைத் தொடர் (தொடர்ச்சி):
b. உயிர்த்தெழுதல் பற்றிச் சதுசேயர்கள் கேள்வி கேட்டல் (மத். 22:23-33; மாற். 12:18-27; லூக். 20:27-39).
c. பிரதான கட்டளையைப் பற்றி ஒரு நியாயசாஸ்திரி கேள்வி கேட்டல் (மத். 22:34-40; மாற். 12:28-34; லூக். 20:40).
d. “கிறிஸ்து”வைப் பற்றி இயேசு கேட்கின்றார் (மத். 22:41-46; மாற். 12:35-37; லூக். 20:41-44).[1]
4. வேதபாரகர் மற்றும் பரிசேயர்கள்மீது கிறிஸ்துவின் சாபம் (மத். 23:1-39; மாற். 12:38-40; லூக். 20:45-47).[2]

## அறிமுகம்

நீங்கள் ஒரு கொலைகார முரடர்களால் சூழப்பட்டிருக்கின்றீர்கள். அவர்களில் ஒருவன் உங்களை நோக்கி விருப்பத்துடன் முன்னேறி வருகின்றான், அவனது உதடுகள் பொல்லாத புன்முறுவலுடன் சுழித்துக் கொண்டுள்ளன. நீங்கள் உங்கள் உயிருக்காகப் போராடுகின்றீர்கள். நீங்கள் அந்த மனிதனைத் தோல்வியடையச் செய்து சமாளிக்கின்றீர்கள், ஆனால் நீங்கள் உங்கள் சுவாசத்தைப் பிடித்துக் கொள்வதற்கு முன்பு, அவனது இடத்தை இன்னொருவன் எடுத்துக் கொள்ளுகின்றான். இந்த நிகழ்வு வரிசை மீண்டும் மீண்டும் திருப்பிச் செய்யப்படுகிறது. நீங்கள் மூச்சுத் திணறிக்கொண்டு, “என்னைத் தாக்குபவர்களுக்கு முடிவே இல்லையா?” என்று வியப்படைகின்றீர்கள். அந்தக் கற்பனையான காட்சிக்கும் இயேசுவின் ஊழியத்தின் கடைசி வாரத்தின் செவ்வாய்க்கிழமையன்று நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்கும் இடையில் இணைவுகள் நிலவுகின்றன. கிறிஸ்து தமது விரோதிகளால் சூழப்பட்டு நிலைத்த தாக்குதலின் கீழ் இருந்தார். தாக்குபவர்களின் ஒரு குழுவை அவர் தோல்வியுறச் செய்த

உடனேயே, அதன் இடத்தை இன்னொரு குழு எடுத்துக்கொள்ளும். அவர்கள் இயேசுவை, கைமுட்டிகளினாலோ அல்லது பட்டயங்களி னாலோ அல்ல, ஆனால் வார்த்தைகளினால் தாக்கினர், ஆனாலும் அவர்களின் அடியானது மரணத்திற்கு ஏதுவாயிருந்தது.

நமது முந்திய பாடத்தில் நாம், கர்த்தரின் அதிகாரத்துவம் அறைகூவல் விடுக்கப்பட்டிருந்ததைக் கண்டோம். மேலும், வரிசெலுத்துதல் பற்றிச் சுமத்தப்பட்ட கேள்விக்கு அவரது பதிலையும் கேட்டோம். எவரொரு வராலும் பதில் அளிக்க இயலாத ஒரு கேள்வியை இயேசு தாமே கேட்கும் வரையிலும் இந்த வாய்மொழிக் கலகம் தொடர்ந்தது. அதைத் தொடர்ந்து கிறிஸ்து, பேரழிவுக்குட்படுத்தும் வாய்மொழித் தாக்குதலின் வரிசை யொன்றை வெளியிட்டார். ஒரு குத்துச்சண்டை வீரர், சிறந்த சண்டை யொன்றில் வெற்றியடையும்போது, நடுவராக இருப்பவர், அந்த வீரரின் கையுறை அணிந்த கைகளில் ஒன்றைத் தூக்கிப் பிடித்தபடி, "வெற்றியாளர் ... மற்றும் இன்னும் திறமைசாலி!" என்று உரக்கக் கூவுகின்றார். இயேசு தமது விரோதிகளுடனான வார்த்தை யுத்தத்தில், "வெற்றியாளர் ... மற்றும் இன்னும் திறமைசாலி!" என்று உதித்தெழுந்தார்.

## உயிர்த்தெழுதலின் வாக்குவாதம்
## (மத். 22:23-33; மாற். 12:18-27; லூக். 20:27-39)

**கேள்வி**

கிறிஸ்து, பரிசேயர்களுக்கும் ஏரோதியர்களுக்கும் பதில் அளித்த பின்பு (மத். 22:15-22), "... சதுசேயர் அவரிடத்தில் வந்த"னர் (மாற். 12:18ஆ). இவர்கள் "உயிர்த்தெழுதல் இல்லையென்று சாதிக்கிற"வர்களாய் இருந்தனர் (மாற். 12:18அ). தேவதூதர்கள் மற்றும் உயிர்த்தெழுதல் உட்பட, ஆவிக்குரிய உலகம் பற்றிய ஒவ்வொரு கருத்தையும் சதுசேயர்கள் புறக்கணித்தனர் (அப். 23:8ஐக் காணவும்). நம்பிக்கையற்ற இந்த மனிதர்கள் இயேசுவை அணுகி "அவரிடத்தில் கேள்வி கேட்கத் தொடங்கினர்" (மாற். 12:23அ).

சதுசேயர்கள், தங்கள் விரோதிகளான பரிசேயர்கள் இயேசுவால் சங்கடம் அடைந்ததை மகிழ்வுடன் அனுபவித்திருந்தனர் என்பதில் சந்தேக மில்லை. இருப்பினும் அவர்கள், அவரால் [இயேசுவால்] பதில் கூற முடியாத - எவரொருவராலும் பதில்கூற முடியாத - ஒரு கேள்வியைத் தாங்கள் கொண்டிருந்ததாக நினைத்தார்கள். அவர்கள் இதைப் பரிசேயர் களுடனான உயிர்த்தெழுதல் பற்றி தங்களின் விவாதங்களில் அனுகூல மாகப் பயன்படுத்தியிருக்க வாய்ப்புண்டு.[3] கற்பிதமான ஒரு விஷயம் பற்றிக் கேள்வி அறிமுகப்படுத்தப்பட்டது:

> போதகரே, ஒருவனுடைய சகோதரன் சந்தானமில்லாமல் தன் மனைவியை விட்டு இறந்துபோனால், அவனுடைய சகோதரன் அவன் மனைவியை விவாகம் பண்ணி, தன் சகோதரனுக்குச் சந்தானம்

*உண்டாக்கவேண்டுமென்று மோசே எங்களுக்கு எழுதி வைத்திருக் கிறாரே. இப்படியிருக்க, ஏழுபேர் சகோதரர் இருந்தார்கள்; மூத்தவன் ஒரு பெண்ணை விவாகம் பண்ணி, சந்தானமில்லாமல் இறந்து போனான். இரண்டாம் சகோதரன் அவளை விவாகம் பண்ணி, அவனும் சந்தானமில்லாமல் இறந்துபோனான். மூன்றாம் சகோதரனும் அப்படியேயானான். ஏழுபேரும் அவளை விவாகம் பண்ணி, சந்தானமில்லாமல் இறந்துபோனார்கள். எல்லாருக்கும் பின்பு அந்த ஸ்திரீயும் இறந்துபோனாள். ஆகையால், உயிர்த்தெழுதலில், அவர்கள் எழுந்திருக்கும்போது, அவர்களில் எவனுக்கு அவள் மனைவி யாயிருப்பாள்? ஏழுபேரும் அவளை மனைவியாகக் கொண்டிருந்தார் களே என்று கேட்டார்கள் (மாற். 12:19-23).*

*இந்த விவரிப்பையும் கேள்வியையும் புரிந்துகொள்வதற்கு, இதன் அடிப்படையாக அமைந்த நியாயப்பிரமாணத்தைப் பற்றி நீங்கள் சற்றே அறிய வேண்டும். இந்த நியாயப்பிரமாணம் ("சகோதரனின் மனைவியை மணந்து கொள்ளுதல் பற்றிய சட்டம்" என்று அறியப்பட்டுள்ள இந்தப் பிரமாணம்) உபாகமம் 25:5-10ல் காணப்படுகிறது.[4] திருமணம் செய்து கொண்டிருந்த ஒரு மனிதன் வாரிசு எதுவுமின்றி இறந்துபோனால், அவனது சகோதரன் (அல்லது நெருங்கிய உறவுமுறையுள்ளவன்) அந்த விதவையைத் திருமணம் செய்து ஒரு வாரிசை உருவாக்கும் பொறுப்புடையவனாய் இருந்தான். அந்த விதவைக்கு இவ்விதமாக ஒரு பிள்ளை பிறக்கும்போது, அந்தப் பிள்ளையானது இறந்துபோன சகோதரனின் சட்டப்பூர்வமான வாரிசு என்று கருதப்படும். குடும்பங்களைப் பாதுகாத்து நிலமும் அதன் வளமும் குடும்ப வட்டத்திற்குள் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்வதே இந்தப் பிரமாணத்தின் நோக்கமாக இருந்தது.*

*இந்தப் பிரமாணம் கிறிஸ்துவின் காலத்தில் கண்டிப்பாக அமல்படுத்தப் பட்டதா இல்லையா என்பது நமக்குத் தெரியாது,[5] ஆனால் அது அப்போதும் மோசேயின் பிரமாணத்தின் ஒரு பாகமாக இருந்தது. சதுசேயர்களால் வரைக்குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சிகளின் வரிசையானது நிகழக்கூடியதாக இல்லாதிருப்பினும் சாத்தியக்கூறுள்ளதாக இருந்தது. அவர்கள், "அவர்களில் எவனுக்கு அவள் மனைவியாயிருப்பாள்?" என்று கேட்டபோது, அநேகமாக அவர்கள் இழிவாக நகைத்திருப்பார்கள். உயிர்த்தெழுதல் என்பது இருக்குமென்றால், அவர்கள் விவரித்திருந்தது போன்ற திருமணச் சிக்கல் ஒன்றை நேராக்குதல் சாத்தியமற்றதாயிருக்கும் என்று அவர்கள் கணக்கிட்டனர்.*

### பதில்

*சதுசேயர்களின் புதிரினால், பரிசேயர்கள் இக்கட்டான நிலையில் இருந்திருக்கலாம், ஆனால் இயேசு அவ்வாறு இருந்ததில்லை. அவர், "நீங்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள்" (மத். 22:29) என்று பதில் அளித்தார். சதுசேயர்கள் எந்த இரண்டு காரியங்களின்மீதாவது அதிகாரத்துவம் கொண்டிருந்தார்கள் என்றால், அவைகள் தேவன் மற்றும் அவரது வசனம்*

*என்றவைகளாகவே இருந்தன. உண்மையில் அவர்களிடத்தில் கிறிஸ்து, "நீங்கள் இவ்விரண்டு விஷயங்கள் பற்றியுமே அறியாதிருக்கின்றீர்கள்!" என்று கூறினார்.*[6]

*அவர்களின் அறியாமையானது, அவர்களின் விவாதத்திற்கு அடிப் படையாக அமைந்திருந்த தவறான யூகங்களினால் தெளிவாயிற்று. கல்லறைக்குப் பின்னாலும் வாழ்வு தொடருகிறது என்றால், அது பூமிக்குரிய அடிப்படையிலேயே தொடரவேண்டும் என்பது அவர்களின் தவறான யூகங்களில் ஒன்றாக இருந்தது. விஷயம் இதுவாக இருப்பதில்லை என்று இயேசு அவர்களுக்குத் தகவல் அறிவித்தார்:*

> *இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் பெண்கொண்டும் பெண் கொடுத்தும் வருகிறார்கள். மறுமையையும் மரித்தோரிலிருந்தெழுந் திருக்குதலையும் அடையப் பாத்திரராக எண்ணப்படுகிறவர்களோ பெண்கொள்வதுமில்லை பெண்கொடுப்பதுமில்லை. அவர்கள் இனி மரிக்கவுமாட்டார்கள், அவர்கள் உயிர்த்தெழுதலின் பிள்ளைகளான படியால் தேவதூதருக்கு ஒப்பானவர்களுமாய், தேவனுக்குப் பிள்ளைகளுமாயிருப்பார்கள் (லூக். 20:34-36).*[7]

*மரணம் [மாத்திரமே] திருமண பிணைப்பை தீர்த்து வைக்கிறது (ரோமர் 7:2). மற்றும், நாம் உலகப்பிரகாரமான சரீரத்தில் அல்ல ஆனால் ஆவிக்குரிய சரீரத்திலேயே உயிர்ப்பிக்கப்படுவோம் (1 கொரி. 15:42-44); மாம்சப்பிரகார மான பசிகள் யாவும் பின்னால் விட்டுவிடப்பட்டிருக்கும்.*[8]

*சதுசேயர்களின் அறியாமையானது இரண்டாவதான தவறான யூகம் ஒன்றினால் தெளிவாகக் காண்பிக்கப்பட்டது: மக்கள் அழியாத்தன்மை யுள்ள ஆவியைக் கொண்டிருப்பதில்லை. அவர்கள், "ஒரு மரித்த மனிதன், இருத்தல் என்பதை விட்டு இல்லாதொழிகின்றான்" என்று நம்பினார்கள்.*[9] *இந்த யூகத்தின் பின்னால் இருந்த தவறை வெளிப்படுத்த இயேசு, பின்வருமாறு கூறினார்:*

> *மரித்தோர் எழுந்திருப்பதைப் பற்றி: "நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாயிருக்கிறேன்" என்று தேவன் முட்செடியைக் குறித்துச் சொல்லிய இடத்தில், மோசேயின் ஆகமத்தில் அவனுக்குச் சொன்னதை, நீங்கள் வாசிக்கவில்லையா? அவர் மரித்தோருக்குத் தேவனாயிராமல், ஜீவனுள்ளோருக்குத் தேவனாயிருக்கிறார் (மாற். 12:26, 27அ).*

*இந்த மேற்கோள் யாத்திராகமம் 3:6ல் இருந்து வந்தது. (யாத்திராகமம் என்பது சதுசேயர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஐந்து பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களில் ஒன்றாக உள்ளது.*[10]*) அந்த வசனப்பகுதியில் யெகோவா "நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனு மாயிருக்கிறேன்" என்று கூறியிருந்தார். யாத்திராகமம் 3:6ன் இவ்வார்த்தை கள் பேசப்படுவதற்கு நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னதாகவே, ஆபிரகாமும், ஈசாக்கும், யாக்கோபும் மரித்துப் போயிருந்தனர். சதுசேயர் களைப் பொறுத்தமட்டில், "மரித்த ஒரு மனிதன் ... ஒன்றுமற்றவனாய்*

மறைந்து போகின்றான்."[11] அவர்களின் நிலைப்பாடு சரியானதாயிருந்தது என்றால், உண்மையில் தேவன், "நான் ஒன்றுமற்றதின் தேவனாயிருக் கிறேன்" என்றே கூறியிருந்தார் என்பதாகிறது.

தேவன், "நான் இல்லாதவர்களின் தேவனாயிருக்கிறேன்" என்று கூறியிருக்க மாட்டார் என்பதே இயேசுவின் கருத்தாக இருந்தது. அவரது விவாதமானது ஒரு முக்கூற்றியலின் மூலம் வெளிப்படுத்தப்படக்கூடும்:[12]

- பிரதான கூற்று: தேவன் மரித்தோருக்குத் தேவனாயிராமல், ஜீவனுள் ளோருக்குத் தேவனாயிருக்கின்றார்.
- துணைக்கூற்று: தேவன், "நான் ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு ஆகியோரின் தேவனாயிருக்கிறேன் [நிகழ்கால வினைச்சொல்]"[13] என்று - அவர்கள் மரித்து நீண்ட காலம் சென்ற பின்பு - கூறினார்.
- முடிவு: ஆகையால், ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு ஆகியோர் மரித்திருந்தாலும் இன்னமும் உயிருள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

உயிர்த்தெழுதல் பற்றிய கேள்வியைக் கிறிஸ்து நேரடியாக அணுகு வதற்கு மாறாக மறைமுகமாக அணுகினார் என்பதைக் கவனியுங்கள். அவர் உயிர்த்தெழுதல் பற்றிச் சதுசேயர் மறுக்கும் விஷயத்தின் வேருக்குச் சென்றார்: மரணம் அடைந்தவர்கள் இன்னமும் உயிர்வாழ்கின்றனர் என்பதை அவர்கள் நம்பாதிருந்தபடியால், அவர்கள் உயிர்த்தெழுதலை விசுவாசியாதிருந்தனர். அந்தச் சித்தாந்தம் தவறாயிருந்ததென்று இயேசு மெய்ப்பித்தார். அவர், "நீங்கள் மிகவும் தப்பான எண்ணங்கொள்ளு கிறீர்கள்" என்று கூறியபோது, தலையைப் பலமாக எதிர்மறையான வகையில் அசைத்திருப்பார் (மாற். 12:27ஆ).

"ஜனங்கள் இதைக்கேட்டு, அவருடைய போதகத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள்" (மத். 22:33). சதுசேயர்களின் மனக்கலக்கம் ஏற்படுத்தும் விசாரணைக்கு எவரொருவரும் இவ்விதமாகப் பதில் அளித்திருந்ததை அவர்கள் முன்பு ஒருக்காலும் கேட்டிருக்கவில்லை. கவனித்துக் கொண்டிருந்த வேதபாரகர்கள் கூட மனதில் கருத்தூன்றப் பட்டனர். அவர்களில் சிலர், "போதகரே, நன்றாய்ச் சொன்னீர்" என்று கூறினார்கள் (லூக். 20:39; மாற். 12:32ஐயும் காணவும்). பரிசேயர்கள் அநேகமாகக் குறிப்புகள் எடுத்துக் கொண்டிருந்திருப்பார்கள். அவர்கள் மீதும் சதுசேயர்கள் அந்தத் தந்திரமான கேள்வியை மறுபடியும் முயற்சிக்க மாட்டார்கள்!

## அற்பமான கட்டளை
## (மத். 22:34-40; மாற். 12:28-34; லூக். 20:40)

சதுசேயர்கள் கலந்துரையாடலில் இருந்து பின்வாங்கினார்கள், ஆனால் பரிசேயர்கள் தோல்வியை ஒப்புக்கொள்ளத் தயாராக இருந்ததில்லை. "அவர் சதுசேயரை வாயடைத்தார் என்று பரிசேயர் கேள்விப்பட்டு, அவரிடத்தில் கூடிவந்தார்கள்" (மத். 22:34). ஒரு அவசரமான ஆலோசனைக் கூட்டத்திற்குப் பின்பு, அவர்கள் தங்களின் திறமைசாலியான ஒரு நியாய

சாஸ்திரியை முன்நிறுத்தினர் (மத். 22:35),[14] இம்மனிதர் வேத வசனங்களில் நன்கு திறன் பெற்றவராக இருந்தார். முன்பு அவர்கள் இளம் பயிற்சியாளர்களை[15] அனுப்பியிருந்தனர்; இவ்வேளையில் அவர்கள், பயிற்சி பெற்ற ஒரு நிபுணரை அனுப்பினர்.

பரிசேயர்கள் கிறிஸ்துவைச் சூழ்ந்து கொண்டிருக்கையில்,[16] அவர்களில் நியாயசாஸ்திரி ஒருவன், ''அவரைச் சோதிக்கும்படி, 'போதகரே, நியாயப்பிரமாணத்திலே எந்தக் கற்பனை பிரதானமானது?' '' என்று கேட்டான் (மத். 22:35, 36). யூதபோதகர்கள் மத்தியில், "இதைக் காட்டிலும் அதிகமாக வேறேந்தக் கேள்வியும் அதிகம் கசப்பான வகையில் விவாதிக்கப்பட்டிருந்ததில்லை."[17] ரபீக்கள், மோசேயின் பிரமாணத்தில் 365 நேர்மறையான கட்டளைகளையும் 248 எதிர்மறையான கட்டளைகளையும் எண்ண முடிந்திருந்தது. 613 கட்டளைகளையும் கடைப்பிடித்தல் என்பது சாத்தியமல்ல என்றிராதிருந்தாலும், கடினமானதாயிருந்தது என்று யூகித்திருந்த நிலையில், அவற்றை அவர்கள் "கடினமானவைகள்" (அதிக முக்கியத்துவமானவைகள்) மற்றும் "இலகுவானவைகள்" (குறைவான முக்கியத்துவமானவைகள்) என்று வகைப்படுத்தியிருந்தனர். எது மிகவும் "கனமானது" (மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது) என்பதே அவர்களின் மிகவும் வலிவார்ந்த விவாதமாக இருந்தது.

முன்பு கிறிஸ்து இன்னொரு நியாயசாஸ்திரியினால் சோதிக்கப்பட்டபோது, நியாயப்பிரமாணம் உபாகமம் 6:5 மற்றும் லேவியராகமம் 19:18 ஆகிய வசனங்களினால் தொகுத்துரைக்கப்படக்கூடும் என்பதை அவர் ஒப்புக்கொண்டிருந்தார்: தேவன்மீது அன்புகூருதல் மற்றும் உங்கள் சகமனிதர்மீது அன்புகூருதல் (லூக். 10:25-28). அந்தக் குறிப்புகளையே இயேசு இந்த வேளையில் மேற்கோள் காண்பித்தார்:[18]

> கற்பனைகளிலெல்லாம் பிரதான கற்பனை எதுவென்றால்: "இஸ்ரவேலே கேள், நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக" என்பதே பிரதான கற்பனை.[19] இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால்: "உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக" என்பதே;[20] இவைகளிலும் பெரிய கற்பனை வேறொன்றுமில்லை (மாற். 12:29-31).

உபாகமம் 6:5ம் வசனம் பத்துகட்டளைகளில் முதல் நான்கு கட்டளைகளையும், லேவியராகமம் 19:18ம் வசனம் கடைசி ஆறு கட்டளைகளையும் தொகுத்துரைத்தன என்று யூதப்போதகர்களில் பலர் நம்பினார்கள்.[21] ஒருவர் உபாகமம் 6:5 மற்றும் லேவியராகமம் 19:18 ஆகிய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தால் அவர் பத்து கட்டளைகள் யாவற்றையும் கடைப்பிடித்தவராவார் - மற்றும் ஒருவர் பத்து கட்டளைகளைக் கடைப்பிடித்தால், அவர் நியாயப்பிரமாணம் முழுவதையும் கடைப்பிடித்தவராவார் என்று தர்க்கம் செய்தனர்.

பரிசேயர்களின் பிரதிநிதி கிறிஸ்துவின் முந்திய பதில்களினால் மனம்

ஈர்க்கப்பட்டு இருந்தார் என்பதைப் பரிசேயர்கள் அறிந்திருக்கவில்லை என்பது உறுதி (மாற். 12:28).[22] இப்போது இவர் கர்த்தருடைய தற்போதைய பதிலுரையுடன் தமக்கிருந்த கருத்தொப்புமையை[23] வெளிப்படுத்தினார்:

> சரிதான், போதகரே, நீர் சொன்னது சத்தியம்: ஒரே தேவன் உண்டு, அவரைத் தவிர வேறொரு தேவன் இல்லை. முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழுப் பலத்தோடும் அவரிடத்தில் அன்புகூருகிறதும், தன்னிடத்தில் அன்புகூருகிறதுபோல் பிறனிடத்தில் அன்புகூருகிறதுமே சர்வாங்கதகனம் முதலிய பலிகளைப் பார்க்கிலும் முக்கியமாயிருக்கிறது (மாற். 12:32, 33).

பெரும்பாலான பரிசேயர்களிடத்தில் பண்பாயிருந்திராத திறந்த மனதுடைய தன்மையும் நேர்மையும் இந்த வேதபாரகனுக்குள் இருந்ததை இயேசு கண்ணுற்றார். இவரிடத்தில் அவர், "நீ தேவனுடைய ராஜ்யத்துக்குத் தூரமானவனல்ல" என்றார் (மாற். 12:34அ). கிறிஸ்து தொடர்ந்து போதிக்கையில் இந்த நியாயசாஸ்திரி தமது திறந்த மனதுள்ள நிலையைத் தக்கவைத்துக் கொண்டாரா? பெந்தெகொஸ்தே நாளன்று, இவர் "தூரமானவனல்ல" என்ற நிலையிலிருந்து கடந்து, ராஜ்யம்/சபையினுள் வந்து சேர்ந்தாரா (அப். 2:38, 41, 47)? நமக்குத் தெரியாது, ஆனால் அவர் தமது வாய்ப்பைக் கொண்டிருந்தார்.

பிரதான கட்டளை பற்றிய கேள்வியென்பது இயேசுவிடம் வெளிப்படையான கருத்தரங்கில் கேட்கப்பட்ட கடைசிக் கேள்வியாக இருந்தது. மாற்கு, "அதன்பின்பு ஒருவரும் அவரிடத்தில் யாதொரு கேள்வியுங் கேட்கத் துணியவில்லை" என்று எழுதினார் (மாற். 12:34ஆ; மத். 22:46ஐக் காணவும்). லூக்கா, "அதன்பின்பு அவர்கள் அவரிடத்தில் வேறொன்றுங் கேட்கத் துணியவில்லை" என்று கூடுதலாகக் கூறினார் (லூக். 20:40). ஒரு விஷயத்தில், அவரது விரோதிகள் சிறுமைப்படுத்தப்பட்டிருத்தலில் களைப்படைந்தனர். இன்னொரு விஷயத்தில், கேள்விகள் மற்றும் பதில்களின் யுத்தமானது அவர்கள் நோக்கங்கொண்டிருந்ததற்கு எதிர்விளைவைக் கொண்டிருந்தது: மக்களின் கண்களில் இயேசு மதிப்புக் குறைந்தவராகக் காணப்படுவதற்குப் பதிலாக, அவர் தமது பதில்களினால் மக்கள் கூட்டத்தை வசீகரித்திருந்தார் (மத். 22:33; மாற். 12:37ஐக் காணவும்).

## மேசியாத்துவப் போராட்டம்
## (மத். 22:41-46; மாற். 12:35-37; லூக். 20:41-44)

கிறிஸ்துவின் விரோதிகள் கேள்விகளைக் கேட்டு முடித்திருந்தனர், ஆனால் அவர் இன்னமும் முடிக்காதிருந்தார். அவர் இன்னமும் தம்மைச் சுற்றியிருந்த பரிசேயர்களிடத்தில் (மத். 22:41)[24] திரும்பி, "கிறிஸ்துவைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அவர் யாருடைய குமாரன்?" என்று கேட்டார் (மத். 22:42அ).

"கிறிஸ்து" என்ற சொற்றொடரைப் பரிசேயர்கள் கேட்டபோது,

அவர்கள் இயேசுவைப் பற்றி நாம் நினைப்பதுபோல் நினைக்கவில்லை, ஆனால் நூற்றாண்டுகளுக்கு முன்பாகத் தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியாவைப் பற்றி அவர்கள் நினைத்தனர். மேலோட்ட மாகப் பார்க்கும்போது, இயேசுவின் கேள்வியானது பதில் அளிக்கச் சுலபமானது போல் காணப்பட்டது. மேசியா (கிறிஸ்து) என்பவர் தாவீதின் சந்ததியாக இருப்பார் (2 சாமு. 7:12, 13; சங். 89:3, 4; 132:11; ஏசா. 9:7; 11:1, 2; எரே. 23:5)[25] என்பது பற்றி யூதத்துவக் கல்வியாளர்களிடையில் ஒரு கருத்தொருமைப்பாடு இருந்தது. ஆகையால் அவர்கள், "அவர் தாவீதின் குமாரன்" என்று பதில் அளித்தனர் (மத். 22:42ஆ). அவர்களின் பதில் தவறானதாயிருக்கவில்லை, ஆனால் அது முழுமையற்றதாக இருந்தது. மேசியா தாவீதின் சந்ததியில் வருவார் என்று வேதவசனங்கள் போதித்தன, ஆனால் அதை விட அதிகமாகவும் அவைகள் போதித்தன. பரிசேயர்கள், மேசியாவைப் பற்றிய தங்கள் புரிந்துகொள்ளுதலை விரிவாக்கிக் கொள்வது அவசியமாயிருந்தது.

இயேசு, முதல் கேள்வியைத் தொடர்ந்து இரண்டாவது கேள்வி யொன்றைக் கேட்டார்: "அப்படியானால், தாவீது பரிசுத்த ஆவியானாலே[26] அவரை 'ஆண்டவர்' என்று சொல்லியிருக்கிறது எப்படி? 'நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப்போடும்வரைக்கும் நீர் என்னு டைய வலதுபாரிசத்தில் உட்காரும்' என்று கர்த்தர் என் ஆண்டவரோடே சொன்னார் என்று சொல்லியிருக்கிறானே?" என்றார் (மத். 22:43, 44). "யூதமக்கள் பொதுவாக, மேசியாவைப் பற்றிய வாக்குத்தத்தம் என்று நினைக்கும்"[27] இந்த மேற்கோளானது, சங்கீதம் 110:1ல் இருந்து வருகிறது. இவ்வசனத்தில் முதலில் குறிப்பிடப்பட்ட "கர்த்தர்" என்பவர் பிதாவாகிய[28] தேவனாவார். இரண்டாவது "ஆண்டவர்" என்பவர் மேசியா ஆவார் என்று யூதர்கள் நம்பினர்.

இயேசு, "தாவீது அவரை 'ஆண்டவர்' என்று சொல்லியிருக்க, அவனுக்கு அவர் குமாரனாயிருப்பது எப்படி?" என்று முடித்தார் (மத். 22:45). கிறிஸ்து "தாவீதின் குமாரனாக" இருந்தார், ஆனால் அவர் இதற்கும் மேற்பட்டவராக இருந்தார். தாவீதின் ஆண்டவர் என்ற வகையில் கிறிஸ்து தாவீதுக்கு முற்பட்டவராக இருந்தார், அவர் தாவீதைப் படைத்தவராக இருந்தார். பல ஆண்டுகளுக்குப் பின்பு இயேசு யோவானுக்குச் சாட்சி யளித்தபோது, "நான் தாவீதின் வேரும் சந்ததியுமாயிருக்கிறேன்" என்று இந்த பல்வகைக் கருத்தை வெளிப்படுத்தினார் (வெளி. 22:16). மேசியா (இராஜரீகமான) தாவீதின் குமாரன் என்பதைப் பரிசேயர்கள் புரிந்துகொண்டிருந்தனர்; அவர் தேவனுடைய (தெய்வீக) குமாரனாகவும் இருந்தார் என்பதை அவர்கள் புரிந்துகொள்வது அவசியமாக இருந்தது.

இயேசுவின் கேள்விக்கு "மாறுத்தரமாக ஒருவனும் அவருக்கு ஒரு வார்த்தையும் சொல்லக் கூடாதிருந்தது" (மத். 22:46). அதற்குப் பதில் அளிப் பதற்கு, அவர்கள் மேசியாவைப் பற்றிய தங்கள் போதனை முழுமை யானதற்கும் குறைவாக இருந்தது என்று ஒப்புக்கொள்ள வேண்டியிருந்தது. மாற்கு, "அநேக ஜனங்கள் அவருடைய உபதேசத்தை விருப்பத்தோடே கேட்டார்கள்" என்று பதிவுசெய்தார் (மாற். 12:37ஆ). வேதவசனங்களின்

*புரிந்துகொள்ளுதல் பற்றித் தங்களைப் பற்றி மேன்மையாக நினைத்துக் கொண்டிருந்தவர்களை இயேசு கலக்கம் அடையச் செய்ததைக் காண்பதை அவர்கள் [ஜனங்கள்] மகிழ்வுடன் அனுபவித்திருக்கலாம் (யோவா. 7:49ல் எண்ணப்போக்கைக் கவனிக்கவும்).*

## *மாய்மால முற்றுகை*
## *(மத். 23:1-39; மாற். 12:38-40; லூக். 20:45-47)*

*இயேசுவும் அவரது விரோதிகளும் வாய்மொழிப் போட்டியில் ஈடுபட்டிருக்கையில், கூட்டம் பெருகியது (மாற். 12:37ஆ-வைக் காணவும்). எதிர்கொள்ளப்படுதலைக் கிறிஸ்து முடித்து வைப்பதற்கு முன்பு, அவர் இன்னும் ஒரு பணிப்பொறுப்பைக் கொண்டிருந்தார். அது மகிழ்ச்சியான தாயிராது, ஆனால் அதைச் செய்யவேண்டியது அவசியமாக இருந்தது.[29] அவருடைய உதடுகளில் இருந்து பரிசேயர்களைப் பற்றிய உறுதியான கடிந்துகொள்ளுதல் ஒன்று வெளிப்பட்டது. இந்தப் பிரிவினர் சில ஆண்டு களாக அவருக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தனர், ஆனால் கர்த்தர் தமது கோபத்தையும் சலிப்பையும் வெளியிடுவதைத் தவிர வேறு உயர்ந்த நோக்கம் எதுவும் கொண்டிருந்ததில்லை என்று நாம் நினைக்கக் கூடாது. இயேசு இவ்வளவு வலிவாகப் பேசியதற்குச் சாத்தியமான சில காரணங்கள் இங்கு தரப்படுகின்றன:[30]*

*(1) பொல்லாங்கை வெளிப்படுத்துவது அவசியமாக உள்ளது. சங்கீதக்காரர், "கர்த்தரில் அன்புகூருகிறவர்களே, தீமையை வெறுத்து விடுங்கள்" என்று எழுதினார் (சங். 97:10அ; ஆமோ. 5:15ஐக் காணவும்). கிறிஸ்து முன்பு, தேவாலயத்தை ஒரு சாட்டையைக் கொண்டு சுத்திகரித் திருந்தார்; இப்போது அவர் அதை வார்த்தைகளைக் கொண்டு செய்தார்.*

*(2) பரிசேயர்களின் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்தவர்கள் தாங்கள் உண்மையில் எதற்கு உட்பட்டிருந்தனர் என்பதைக் காண்பது அவசியமாக இருந்தது. இவ்விதமாக அவர், பொதுவாகத் திரளான கூட்டத்தாரை நோக்கியும் (மத். 23:1), குறிப்பாகத் தமது சீஷர்களை நோக்கியும் (மத். 23:1; லூக். 20:45) உரையாற்றினார்.*

*(3) பரிசேயர்கள் மனந்திரும்புவது அவசியமாயிருந்தது. ஒருவேளை அவர்களில் ஒருவர் அல்லது அதிகமானவர்கள் தங்கள் உணர்வுகளில் அதிர்ச்சியடையலாம் என்று நம்பி, மேலும் அவர் பரிசேயர்களிடத்திலேயே உரையாற்றினார் (மத். 23:13).[31] வேத வசனங்களின்படி, "ஞானமுள்ள வனைக் கடிந்துகொள், அவன் உன்னை நேசிப்பான்" (நீதி. 9:8ஆ). முன்னதாக இயேசு, "ராஜ்யத்திற்குத் தூரமானவராயிராத" (மாற். 12:34) பரிசேயர் ஒருவரைக் கண்டிருந்தார்; ஒருவேளை நேர்மையான இருதயங் களைக் கொண்ட மற்றவர்களும் அங்கு இருந்திருக்கலாம்.*

*மத்தேயு 23ல் உள்ள "ஐயோக்களை" கிறிஸ்து பளிச்சிடும் கண்களுடனும், குத்திப்பாயும் விரலுடனும் வெளியிட்டார் என்று பெரும்பாலான எழுத்தாளர்கள் சித்தரித்துள்ளனர், ஆனால் அவரது செய்தியின் முடிவில் உங்களால் வேதனையை உணரமுடிவதில்லையா? "எருசலேமே,*

*எருசலேமே ..." (வ. 37-39). ஒரு எழுத்தாளர் இவ்வாறு முன்மொழிந்தார். மத்தேயு 23ம் அதிகாரம் ...*

> *... பரிதபித்தலின் கதறுதலாக உள்ளது; உறுதிமிக்க வாக்கியங்களின் பரிதாபத்திற்குரிய உச்சரிப்பையும் அதன் நடுக்கத்தையும் நாம் பற்றிக் கொள்ளத் தவறினால் நாம் இதன் ஆவியையும் நோக்கத்தையும் தவற விடுகின்றோம். உண்மையில் இது, இரட்சகரின் உக்கிரமான விரோதி களுக்கு அவரது கடைசி வேண்டுகோளாக, இன்னும்கூட அவர்கள் மனந்திரும்பலாம் என்ற நம்பிக்கையில், அவர்களின் குற்றத்தைச் சித்தரிப்பதாகவும் அதன் தவிர்க்க இயலாத தண்டனையைப் பற்றி முன்னெச்சரிக்கை செய்வதாகவும் உள்ளது.*[32]

*மத்தேயு 23ஐப் பற்றி நாம் பிற்பாடு விரிவாகப் படிப்போம்; இந்தக் கணத்திற்கு, பரிசேயர்களின் மாய்மாலத்தின்மீதே இவ்வத்தியாயத்தின் வலியுறுத்தம் இருந்தது என்பதை நாம் கவனிப்போம். 23:13-15, 23, 25, 27-29 ஆகிய வசனங்களைக் கண்ணோக்குங்கள்.*

*கர்த்தருடைய கண்களில், மாய்மாலமாயிருத்தலின் பாவம் என்பதை விட ஒரு சில பாவங்களே பெரியவைகளாயிருந்தன. "மாய்மாலம்"* ("hypocrite" *என்ற ஆங்கில வார்த்தை) என்பது கிரேக்கர்கள் மேடை நடிகர் ஒருவரைக் குறிப்பிடுகின்ற கிரேக்க வார்த்தையான hupokrites*[33] *என்பதன் ஒலிபெயர்ப்பாக உள்ளது. இது, ஒருவர் தாம் கொண்டிராதவற்றைக் கொண்டிருப்பதாக பாசாங்கு செய்தல் என்று அர்த்தப்படுகிறது. "பாசங்கு செய்தல்" என்ற வார்த்தையைக் கவனியுங்கள். சிலவேளைகளில் நாம் எல்லாருமே, "சிலவற்றைக் கூறுகின்றோம், ஆனால் நாம் அவற்றைச் செய்யாதிருக்கின்றோம்" - ஆனால், சீரற்ற தன்மை என்பது தன்னிலேயே மாய்மாலமாக இருப்பதில்லை. தாம் அறிந்துள்ளவற்றின்படி மிகச் சிறப்பாக வாழத்தவறுபவர் மாய்மாலக்காரர் அல்ல; நாம் யாவருமே [சிலவேளை களில்] அவ்வாறு செய்கின்றோம் (ரோமர் 3:23). மாறாக, தமது ஆவிக்குரிய நிலைப்பாடு குறித்து வேண்டுமென்றே மற்றவர்களை வஞ்சிக்க முயற்சி செய்கின்றவரே மாய்மாலக்காரராக இருக்கின்றார். மாய்மாலம் நிறைந்த இருதயத்தில் இருந்தே மாய்மாலமான வாழ்வு கிளம்பி வருகிறது.*

*விஷயம் இதுவாக இருக்கையில், ஒரு நபர் மாய்மாலக்காரராக இருக்கின்றாரா அல்லது அவர், நம் எல்லாரையும் வருத்துகிற பலவீனங் களுக்கு மாத்திரம் பணிந்திருக்கின்றாரா என்பதை நாம் உறுதியாக எவ்வாறு அறியமுடியும்? நம்மால் இது முடியாது. இயேசு மனிதரின் உள்ளத்தில் இருப்பதை அறிந்திருப்பதால், அவரால் இதை அறிய முடியும் (யோவா. 2:25); ஆனால் நீங்களும் நானும் மற்றவர்களின் உள்ளத்தில் இருப்பதை அறிய இயலாது. ஆகையால் மற்றவர்களை "மாய்மாலக்காரர்கள்" என்ற முத்திரையிடுவதற்கு நாம் தயங்குவோமாக. எனது சொந்த இருதயம் ஒன்றை மாத்திரமே நான் அறிய முடியும்; உங்கள் சொந்த இருதயத்தை மாத்திரமே நீங்கள் அறிய முடியும் (1 கொரி. 2:11). ஆகையால், பரிசேயர் களின் மாய்மாலம் பற்றி நாம் படிக்கையில், இவ்வேதவசனப் பகுதியை பிறருக்கு நாம் நடைமுறைப் படுத்தாதிருப்போமாக. மாறாக, மாய்மாலத்*

தின் எச்சங்கள் ஏதாவது நமது இருதயத்தில் உள்ளதா என்று காண்பதற்கு ஒவ்வொருவரும் தத்தமது இருதயங்களைப் பரிசீலனை செய்வோமாக.

பரிசேயர்களின் மாய்மாலத்தை கிறிஸ்து கண்டனம் பண்ணுகையில், அவர்கள், "அதிக ஆக்கினை அடைவார்கள்" என்று இயேசு கூறினார் (மத். 23:14; மாற். 12:40) மற்றும் அவர்களை "நரகத்தின் மகன்[கள்]" என்று அவர் அழைத்தார் (மத். 23:15). அவருடைய போதனையின் முடிவிற்கருகில், அவர் "சர்ப்பங்களே, விரியன் பாம்புக் குட்டிகளே! நரகாக்கினைக்கு எப்படித் தப்பித்துக் கொள்வீர்கள்?" என்றார் (மத். 23:33).[34] சீஷர்கள் இன்னமும் பரிசேயர்களைப் புண்படுத்துதல் பற்றிக் கவலை கொண்டிருந்தால் (மத். 15:12), இயேசுவின் "ஐயோக்கள்" அவர்களுக்கு அநேகமாக அஜீரணத்தைக் கொடுத்திருக்கும்.

மீண்டுமாக, கிறிஸ்துவின் வார்த்தைகளினுடைய கடினத்தன்மை யானது, அவர் தமது விரோதிகளைச் சிட்சிப்பதையே நோக்கங் கொண்டிருந்ததாகச் சுட்டிக்காண்பிக்கின்றன என்று நாம் முடிவு செய்து விடக்கூடாது என்ற நான் கூறுகின்றேன். இயேசுவின் முடிவான புலம்பலா னது (மத். 23:37-39) "இரக்கம் காண்பித்தலுக்கான ஒரு மனவிருப்பத்தை, ஒரு ஏக்கத்தையும் கூட" வெளிப்படுத்துகிறது.[35]

இது, கிறிஸ்துவின் வெளிப்படையான இந்தக் கடைசி உரையாக இருந்திருக்கலாம்;[36] இது உறுதியாகவே கடைசியான உரைகளில் ஒன்றாக இருந்தது. "இது தகுதியானதாக இருந்தது; ஆனால் இது முடிவை நிர்ணயம் செய்வது என்பதை இயேசு அறிந்திருக்க வேண்டும். இதுமுதல் அவர் இரக்கத்தை எதிர்பார்க்க இயலாது."[37] அவரது விரோதிகள் யுத்தகளத்தை விட்டு "இரத்தக் கறையுடன்" அடிபட்டவர்களாகச் சென்றிருக்கலாம், ஆனால் அவர்கள் முன் எப்போதைக்காட்டிலும் அதிகமாக அவரைக் கொல்லத் தீர்மானித்தவர்களாய் இருந்தனர்.

## முடிவுரை

கிறிஸ்துவின் வெளிப்படையான ஊழியம் முடிக்கப்பட்டது, ஆனால் அந்த நாள் இன்னும் முடியவில்லை. நமது அடுத்த பாடத்தில் நாம், நிகழ்ச்சிகள் பொதியப்பட்ட அந்த செவ்வாய்க்கிழமையைப் பற்றிய நமது படிப்பைத் தொடருவோம். இந்த எடுத்துரைப்பை முடிக்கையில், மோதலின் அந்த நாளில் இருந்து இயேசு, "வெற்றியாளராக ... மற்றும் இன்னமும் திறமைசாலியாக" புறம்பே நடந்து சென்றார் என்பதை மீண்டும் வலியுறுத்தவே நான் விரும்புகின்றேன்.

கேள்விகளுக்குப் பதில் அளிக்கக் கர்த்தர் கொண்டிருந்த திறமையை - எதைக் கூறுவது மற்றும் அதை எவ்வாறு கூறுவது என்று அறிந்திருத்தலை, எப்போது மென்மையாக மற்றும் எப்போது வன்மையாக இருப்பது என்று அறிந்திருத்தலை - நான் கொண்டிருக்க வேண்டும் என்று அடிக்கடி நான் விரும்பி இருக்கின்றேன்.[38] அந்தத் திறமையை நான் கொண்டிருப்பதில்லை, மற்றும் ஒருபோதும் நான் அதைக் கொண்டிருக்க மாட்டேன். இருப்பினும், நான் அவருக்குள் விசுவாசமாயிருந்தால், கடைசியில் நானும் கூட வெற்றி

*பெற்றவனாக இருப்பேன் என்று அறிவது ஆறுதலாக உள்ளது (வெளி. 15:2)!*

---

*குறிப்புகள்*

*[1]முந்திய பாடத்தில் குறிப்பிட்டது போல, இவ்விடத்திலிருந்து நியாயத்தீர்ப்பு பற்றிய இயேசுவின் போதனை வரையுள்ள நிகழ்ச்சிகளைச் சிலர் செவ்வாய்க் கிழமையன்று நடந்ததாகக் கூறுவதற்குப் பதில் புதன்கிழமையன்று காலையில் நடைபெற்றதாகக் கூறுகின்றனர். [2]இதைக் கிறிஸ்துவின் வெளியரங்கமான கடைசி உரை என்று பல எழுத்தாளர்கள் குறிப்பிடுகின்றனர், இது அவ்வாறு இருக்கலாம். எனது ஒப்பீட்டில், நான் இதைத் தொடர்ந்து சிலுவையில் இயேசு உயர்த்தப்பட்டிருந்த போது கூறிய வெளியரங்கமான உரையைக் கொடுத்துள்ளேன் (யோவா. 12:20-36). [3]இந்தப் பாடக்கருத்துப் பற்றிப் பரிசேயர்களுக்கும் சதுசேயர்களுக்கும் இடையில் தொடர்ந்து நடைபெற்றக் கொண்டிருந்த போராட்டம் பற்றிய ஒரு விவரிப்புக்கு அப். 23:6-9ஐக் காணவும். [4]சகோதரனின் விதவையைத் திருமணம் செய்துகொள்ளுதல் பற்றிய பிரமாணத்தை மோசே பதிவுசெய்தார், ஆனால் இந்தப் பழக்கமானது மிகப்பழமையானதாக இருந்தது (ஆதி. 38:8ஐக் காணவும்). சகோதரனின் விதவையைத் திருமணம் செய்துகொள்ளுதல் பற்றிய பாடக் கருத்து ரூத்தின் சரித்திரத்தில் உள்ள ஒரு ஆர்வமுள்ள நிகழ்ச்சிக்கு அடிப்படையாக அமைந்துள்ளது (ரூத் 3:1-4:12). [5]இதை, "அரிதாகப் பயன்படுத்தப்பட்ட பிரமாணம்" என்று கார்ட்டர் அவர்கள் அழைத்தார்* (John Franklin Carter, *A Layman's Harmony of the Gospels* [Nashville: Broadman Press, 1961], 260). *[6]நீங்களும் நானும் அறியாதிருக்கத் துணியாமல் இருக்கும் இரு தலைப்புக்கள் இருக்குமென்றால், அவைகள் வேத வசனங்கள் மற்றும் தேவனுடைய வல்லமை என்பவைகளாகவே இருக்கும்! [7]மார்மன்களைப் போன்ற சிலர், இந்த வசனப்பகுதியைப் புரிந்துகொள்ளத் தவறி, திருமணப் பிணைப்புகள் கல்லறைக்கப்பாலும் இருக்கின்றன என்று போதிக்கின்றனர். [8]இது, நாம் இந்த வாழ்வில் நாம் அன்புகூர்ந்த குடும்ப நண்பர்கள்மீது விசேஷித்த பிரியத்தை உணரமாட்டோம் என்று அர்த்தப்படுவதில்லை. இது, நமது உறவுமுறை மாறுபட்டதாயிருக்கும் என்று அர்த்தப்படுகிறது, நாம் மாம்சத்திற்குரியதல்ல ஆனால் ஆவிக்குரிய பிணைப்பைக் கொண்டிருப்போம்.* [9]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 602. *[10]மக்களுடன் படிப்பதற்கு, அவர்கள் ஏற்றுக்கொள்ளும் அதிகாரத்துவத்துடன் நீங்கள் தொடங்க வேண்டும்.*

[11]Ibid. *[12]முக்கூற்றியல்கள் பற்றிய ஒரு சுருக்கமான கலந்துரையாடலுக்கு, "கிறிஸ்துவின் வாழ்வு, 4" என்ற புத்தகத்தில் உள்ள "நான் பார்வையற்றவனாக இருந்தேன், ஆனால் இப்போது பார்க்கிறேன்" என்ற பாடத்தில் காணவும். [13][வேதாகமம்] வார்த்தைக்கு வார்த்தை ஏவுதல் பெற்றுள்ளது என்பதைப் புறக்கணிக்கின்ற சிலர், நாம் உபதேசத்தைப் போதிக்கும்போது, குறிப்பிட்ட வார்த்தைகளின்மீது கவனம் செலுத்தக்கூடாது என்று கூறுகின்றனர். ஒரு வார்த்தையின் வினைச் சொல்லின்மீது கருத்தை ஏற்படுத்துவதை இயேசு [இவ்விடத்தில்] வலியுறுத்தினார். [14]மாற்கு இவரை, வேதபாரகர் என்று அழைத்தார் (மாற். 12:28). இவர் குடியுரிமைச் சட்டத்தில் அல்ல, ஆனால் மதரீதியான சட்டத்தில் நிபுணராயிருந்தார். [15]இந்தத் தனிநபர்களைப் பற்றிய கலந்துரையாடலை "என்ன ஒரு நாள்!" என்ற பாடத்தில் காணவும். [16]இந்த விவரிப்பை மத்தேயு 22:34, 41 உடன் ஒப்பிட்டுக் காணவும். இவர்கள், இயேசுவுக்கும் நியாயசாஸ்திரிக்கும் இடையில்*

*நடைபெற்ற கலந்துரையாடலின் போது ''ஒன்றாகக் கூடியிருப்பதில்'' நிலைநின்றனர்.* The Living Bible *என்ற வேதாகமத்தின் பொழிப்புரையானது, மத்தேயு 22:41ஐ,* "Then, surrounded by the Pharisees, he asked them a question ..." *என்று தரவழைத்துள்ளது.* [17]H. I. Hester, *The Heart of the New Testament* (Liberty, Mo.: Quality Press, 1963), 193. [18]*உண்மையில் இந்தக் கேள்விக்கு முன்னரே இயேசு பதில் அளித்திருந்தார் என்பதால், இது மீண்டும் கேட்கப்பட்டது ஏன் என்று ஒருவர் வியப்படையலாம். ஒருவேளை இது, முரண்பாடுள்ளதாக இருந்ததாலும், கிறிஸ்து என்ன விதமாகப் பதில் அளித்தாலும், அது கூட்டத்தின் ஒரு பகுதியை விலக்கும் என்று பரிசேயர்கள் நம்பியிருந்ததாலும் மீண்டும் கேட்கப்பட்டிருக்கலாம். இருப்பினும், எருசலேமுக்குப் புறம்பே நடந்திருந்த இதற்கு முந்திய நிகழ்ச்சியைப் பற்றி கேள்வி கேட்டவர்கள் அறியாதிருந்தனர் என்பதே மிகவும் ஏற்புடையதாக உள்ளது.* [19]*மாற்கு 12:29, 30 பற்றிய ஒரு விரிவான கலந்துரையாடலுக்கு, "எல்லாவற்றுடனும் தேவன்மீது அன்புகூருதல்'' என்ற அடுத்து வரும் பிரசங்கத்தில் காணவும்.* [20]*இயேசுவினிடத்தில், ''இரண்டாவது'' கட்டளை என்ன என்று கேட்கப்பட வில்லை. உலகில் நான் வாழும் பகுதியில் இதை நாங்கள் "இலவச இணைப்பு" என்று கூறுவதுண்டு.*

[21]*''இரண்டாவது கட்டளை'' பற்றிய இதே விதமான தர்க்கத்தைப் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் பயன்படுத்தினர் (ரோமர் 13:8-10; கலா. 5:14; யாக். 2:8 ஆகிய வசனங்களைக் காணவும்).* [22]*நியாயசாஸ்திரி பரிசேயர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியதாக மத்தேயு சுட்டிக்காண்பித்தார் (மத். 22:34, 35). அதே வேளையில் மாற்கு, நியாயசாஸ்திரியின் கேள்வி தானாக எழுந்ததாகவும் நேர்மையானதாகவும் இருந்தது என்ற கருத்தை விட்டுச் சென்றார் (மாற். 12:28). இவ்விரு சுவிசேஷ விவரங்களும் முரண்படுபவைகளாயிராமல் ஒன்றுக்கொன்று துணைக் கருத்துக்களைத் தருபவையாக உள்ளன: தொடர்ந்து எப்படிச் செயல்படுவது என்று அறியாமல் பரிசேயர்கள் கலக்கமுற்று இருக்கையில், அவர்களில் ஒருவர் (நியாயசாஸ்திரி) அநேகமாக, தாமே முன் வந்து இயேசுவினிடத்தில் சென்று கேள்வி கேட்கவும் அதற்கு அவர் பதில் அளிப்பதைக் கேட்க விரும்பியும் இருக்கக்கூடும். இவரது உண்மையான ஆர்வத்தைப் பரிசேயர்கள் அறியாது இருந்திருக்கலாம்.* [23]*இவரது பதிலுரையானது இவரது சகபரிசேயர்களின் மத்தியில் பெரிய கலக்கத்தை உண்டு பண்ணியிருக்க வேண்டும்.* [24]*மத்தேயு சுவிசேஷத்தின்படி, இயேசு பரிசேயரிடத்தில் இந்தக் கேள்வியைக் கேட்டார். மாற்கு 12:35 வசனம், இயேசு தமது உரையைக் கேட்டவர்களிடத்தில் இந்தக் கேள்வியைக் கேட்டார் என்ற கருத்தை விட்டுச் செல்லுகிறது. லூக்கா 20:40, 41 வசனங்கள், இயேசு தம்மிடத்தில் கேள்வி கேட்டவர்களுக்கு முன்பாக இந்தக் கேள்வியை வைத்தார் என்று சுட்டிக்காண்பிக்கிறது. இந்த விவரங்கள் யாவும் மிகவும் சரியானவைகளாகவே உள்ளன: அவர், காது கேட்கக்கூடிய தூரத்திலுள்ள ஒவ்வொருவரை நோக்கியும் இந்தக் கேள்வியைத் திருப்பினார், ஆனால் அவர் விசேஷமாக (தம்மைக் கேள்வி கேட்டிருந்த) பரிசேயர்கள் பதில் அளிக்கும்படி அறைகூவல் விடுத்தார்.* [25]*மேசியாத்துவத்தின் அந்த நிலைப்பாட்டை இயேசு நிறைவேற்றினார் (மத். 1:1; ரோமர் 1:5). சுவிசேஷ விவரங்கள் முழுவதிலும், அவர் "தாவீதின் குமாரன்" என்று குறிப்பிடப்பட்டுள்ளார் (மத். 12:23; 15:22; 20:30; 21:9, 15 ஆகிய வசனங்களைக் காணவும்).* [26]*இவ்விதமாக இயேசு, சங்கீதம் 110ஐத் தாவீது எழுதினார் என்றும் அதை அவர் [தாவீது] ஏவுதலினாலேயே எழுதினார் என்றும் உறுதிப்படுத்தினார்.* [27]Carter, 263. *இவ்வசனப்பகுதி பேதுருவினால் ஒருமுறை மேற்கோள் காண்பிக்கப்பட்டது (அப். 2:34, 35) மற்றும் இது எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவரால் திரும்பத் திரும்ப எடுத்துரைக்கப்பட்டது (எபி. 1:13; 5:6;*

*7:17, 21).* [28]*சங்கீதம் 110:1ல் முதல் "ஆண்டவர்" என்பது ஆங்கில வேதாகமத்தில் முழுவதும் பெரிய எழுத்துகளினால் எழுதப்பட்டுள்ளது* ("LORD"). "LORD" *என்ற (முழுவதும் பெரிய எழுத்துக்களைக் கொண்ட) வார்த்தையானது தேவனுடைய பரிசுத்த நாமத்தைக் குறிக்கிறது. எபிரெய மொழியில் உள்ள மூலவசனத்தில் (இதில் உயிரெழுத்துக்கள் இல்லை), இந்தப் பரிசுத்த நாமம் நான்கு மெய்யெழுத்துக் களினால் குறிக்கப்பட்டது (இது* "The Sacred Tetragrammaton" *அல்லது* "the sacred four letters" [*"பரிசுத்த நான்கெழுத்துக்கள்"*] *என்று அறியப்படுகிறது:* YHWH *(இது* JHVH *என்றும் விளக்கம் அளிக்கப்படக்கூடும்). தேவனுடைய நாமத்தை வீணாக வழங்குவதற்குப் பயந்து, யூதர்கள் இந்தப் பெயரைக் கூறாதிருந்தனர். காலப் போக்கில், இதன் உண்மையான உச்சரிப்பு இழந்துபோகப்பட்டது. கடைசியில் மெய்யெழுத்துக்களுடன் உயிரெழுத்துக்கள் சேர்க்கப்பட்டபோது, எந்த உயிரெழுத்துக்களைச் சேர்க்க வேண்டும் என்பது எவரொருவரும் அறிந்திருக்க வில்லை. இந்தப் பெயர்* "Yahweh" *என்று உச்சரிக்கப்பட வேண்டும் என்று பலர் நினைக்கின்றனர். சில மொழிபெயர்ப்பாளர்கள், "கர்த்தர்" என்பதற்கான எபிரெய வார்த்தையிலிருந்து தங்கள் மனவிருப்பத்தின்படி உயிரெழுத்துக்களை எடுத்துக் கூட்டி,* "Jehovah" *என்ற பெயரைக் கண்டறிந்தனர். இந்தப் பெயரை எப்படி எழுத வேண்டும் அல்லது எப்படி உச்சரிக்க வேண்டும் என்பதை நாம் அறியாதபடியால்,* NASB *உட்படப் பல (ஆங்கில) மொழிபெயர்ப்புகளில் தேவனுடைய "பரிசுத்த நாமத்திற்கு"ப் பதிலுக்கு ஈடாக (எல்லாம் பெரிய எழுத்துக்கள் கொண்டுள்ள)* "LORD" *என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.* [29]*அவ்வப்போது ஒவ்வொரு பிரசங்கியாரும் கடிந்துகொள்ளுதலின் அறைகூவலை எதிர்கொள்ளுகின்றார் (2 தீமோ. 4:1-5ஐக் காணவும்).* [30]*''பரிசேயர்களின் புளித்தமாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்'' என்ற பாடத்தில் சாத்தியமான ஒரு நான்காவது காரணம் தரப்பட்டுள்ளது.*

[31]*ஒவ்வொருவரும் ஒரே மாதிரியான அணுகுமுறையினால் அடையப்பட இயலாது. சிலருக்கு முனைப்பான ஒரு செய்தி தேவைப்படுகிறது.* [32]David Smith, *Our Lord's Earthly Life* (New York: G. H. Doran, 1926), 353; quoted in H. I. Hester, *The Heart of the New Testament* (Liberty, Mo.: Quality Press, 1963), 194. [33]*Hupokrites என்பது ''நியாயந்தீர்த்தல்'' (krites; இது, ''கிரி-டேஸ்'' என்று உச்சரிக்கப்படுகிறது) என்பதற்கான வார்த்தையை "கீழே" அல்லது "ஆல்" என்று அர்த்தப்படும் hypo என்ற முன்னுரிச்சொல்லுடன் இணைத்துப் பெறப்பட்டுள்ளது.* [34]*இந்த வசனப்பகுதியை மத்தேயு 3:7; 12:34; லூக். 3:7 ஆகியவற்றுடன் ஒப்பிட்டுக் காணவும்.* [35]Carter, 265. [36]*குறிப்பு எண் 2ஐ மறுகண்ணோட்டமிடவும்.* [37]B. S. *டீன் அவர்களின் "வேதாகம வரலாற்றின் வரைக்குறிப்பு'' என்ற புத்தகத்தில் காணவும்.* [38]*இயேசு இருந்தது போன்ற சூழ்நிலையில் நான் பலவேளைகளில் இருந்துள்ளேன்: மதரீதியாக நேரெதிர்க்கருத்துக் கொண்டவர்களால் சூழப்பட்டிருத்தல். ஒரு நபர் என்மீது ஒரு கேள்விக்கணையைத் தொடுப்பார். நான் பதில் அளித்த உடனே, எனது பதிலை விளக்கப்படுத்துவதற்கு முன்னர், இன்னொரு பக்கத்திலிருந்து யாராவது ஒருவர் இன்னொரு கேள்விக்கணையை என்மீது தொடுப்பார். இந்த வேளைகளில் இருந்து நான் ஒரு வெற்றியாளன் அல்லது திறமைசாலி என்ற உணர்வுடன் வெளிவந்தது இல்லை.*